www.Padasalai.Net www.TrbTnpsc.com

# Kanchipuram Dt

## முதல் திருப்புதல் தேர்வு – 2025
## பதினொன்றாம் வகுப்பு

நேரம்: 3.00 மணி | கணக்குப்பதிவியல் | மதிப்பெண்கள்:90

### பகுதி – அ

I அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்:– 20x1=20

1. நிதித்தகவல்களின் அகப்பயனாளராகக் கருதப்படுபவர் யார்?
   அ) கடனீந்தோர் ஆ) பணியாளர் இ) வாடிக்கையாளர் ஈ) அரசு
2. வணிகத்தின் உரிமையாளர் இட்ட முதலிற்கு, வணிக நிறுவனம் கடன்பட்டிருக்கிறது என்பதை கூறும் கருத்து
   அ) பண மதிப்பீட்டுக் கருத்து ஆ) அடக்கவிலை கருத்து
   இ) வணிகத்தனித்தன்மை கருத்து ஈ) இரட்டைத் தன்மை கருத்து
3. ஒரு நிறுவனத்தின் சொத்துக்கள் மதிப்பு ₹.1,00,000 மற்றும் அதன் வெளியாட்களுடனான பொறுப்புகள் ரூ.60,000 எனில், அந்நிறுவனத்தின் முதல் ______
   அ) ₹.1,60,000 ஆ) ₹.60,000 இ) ₹.1,00,000 ஈ) ₹.40,000
4. கு.ப.எ. என்பது
   அ) பேரேட்டு பக்க எண் ஆ) குறிப்பேட்டு பக்க எண்
   இ) சான்று சீட்டு எண் ஈ) ஆணை எண்
5. இருப்பாய்வு என்பது ஒரு
   அ) அறிக்கை ஆ) கணக்கு இ) பேரேடு ஈ) குறிப்பேடு
6. கொள்முதல் ஏட்டில் பதிவு செய்வது
   அ) அனைத்து சரக்குகளின் கொள்முதல்
   ஆ) அனைத்து சொத்துக்களின் கடன் கொள்முதல்
   இ) அனைத்து சரக்குகளின் கடன் கொள்முதல்
   ஈ) அனைத்து சொத்துக்களின் கொள்முதல்
7. சிறிய செலவினங்களைப் பதியும் ஏடு
   அ) ரொக்க ஏடு ஆ) கொள்முதல் ஏடு
   இ) செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு ஏடு ஈ) சில்லறை ரொக்க ஏடு
8. ரொக்க ஏட்டின் படி இருப்பு ரூ.2,000. வங்கியால் பற்று செய்யப்பட்ட வங்கிக் கட்டணம் ₹.50 ரொக்க ஏட்டில் பதிவிடப்படவில்லை எனில் வங்கி அறிக்கையின் படி இருப்பு என்ன?
   அ) ₹.1,950 வரவு இருப்பு ஆ) ₹.1,950 பற்று இருப்பு
   இ) ₹.2,050 பற்று இருப்பு ஈ) ₹.2,050 வரவு இருப்பு
9. இருப்பாய்வின் வேறுபாடு எடுத்துச் செல்லப்படுவது
   அ) முதல் கணக்கிற்கு ஆ) வியாபாரக் கணக்கிற்கு
   இ) அனாமத்துக் கணக்கிற்கு ஈ) இலாபநட்டக் கணக்கிற்கு
10. தேய்மானம் எதனால் ஏற்படுகிறது?
    அ) காலப்போக்கு ஆ) பயன்பாடு இ) வழக்கொழிவு ஈ) அ, ஆ மற்றும் இ

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



11. வங்கி வைப்புகள் மீதான வட்டி
அ) முதலின வரவு ஆ) வருவாயின வரவு இ) முதலினச் செலவு ஈ) வருவாயினச் செலவு

12. இறுதிச் சரக்கிருப்பு என்பது ஓர் ______
அ) நிலையான சொத்து ஆ) நடப்புச் சொத்து
இ) கற்பனைச் சொத்து ஈ) புலனாகாச் சொத்து

13. வாரா ஐயக்கடன் ஒதுக்கு கணக்கு ஏற்கனவே இல்லையெனில், உருவாக்கப்பட்ட ஐயக்கடன் ஒதுக்கு
அ) வாராக்கடன் கணக்கில் பற்று வைக்க வேண்டும்.
ஆ) பற்பல கடனாளிகள் கணக்கில் பற்று வைக்க வேண்டும்.
இ) வாராக்கடன் கணக்கில் வரவு வைக்க வேண்டும்.
ஈ) இலாப நட்டக் கணக்கில் பற்று வைக்க வேண்டும்.

14. Tally என்பது இதற்கு உதாரணமாக இருக்கிறது.
அ) உருவாக்கப்பட்ட கணக்கியல் மென்பொருள்
ஆ) ஆயுத்த கணக்கியல் மென்பொருள்
இ) உள்கட்டமைக்கப்பட்ட மென்பொருள்
ஈ) திருத்தியமைக்கப்பட்ட கணக்கியல் மென்பொருள்

15. முன் கூட்டிச் செலுத்திய வாடகை ஒரு
அ) பெயரளவு கணக்கு ஆ) ஆள்சார் கணக்கு
இ) சொத்து கணக்கு ஈ) பிரதிநிதித்துவ ஆள்சார் கணக்கு

16. வங்கி அறிக்கை என்பது
அ) ரொக்க ஏட்டின் ரொக்கப் பத்தியின் நகல்
ஆ) ரொக்க ஏட்டின் வங்கிப் பத்தியின் நகல்
இ) வங்கி புத்தகத்தில் வாடிக்கையாளர் கணக்கின் நகல்
ஈ) வணிகத்தால் விடுக்கப்பட்ட காசோலையின் நகல்

17. இயந்திரம் நிறுவுவதற்கு செலுத்தப்பட்ட கூலியை கூலிக் கணக்கில் பற்று வைப்பது
அ) பகுதி விடு பிழை ஆ) விதிப் பிழை
இ) முழுவிடு பிழை ஈ) இருமுறை பதிந்த பிழை

18. நற்பெயர் எவ்வாறு வகைப்படுத்தப்படுகிறது ?
அ) ஓர் நடப்புச் சொத்து ஆ) ஓர் நீர்மைச் சொத்து
இ) புலனாகும் சொத்து ஈ) புலனாகாச் சொத்து

19. கணக்கியல் மென்பொருள் என்பது இதற்கு உதாரணம்.
அ) அமைப்பு மென்பொருள் ஆ) செயல்பாட்டு மென்பொருள்
இ) பயன்பாட்டு மென்பொருள் ஈ) இயக்க முறைமை

20. இந்தியாவில், கணக்கியல் தரநிலைகளை வழங்கும் அமைப்பு
அ) இந்திய மைய வங்கி ஆ) இந்திய அடக்க விலை மற்றும் கணக்காளர் நிறுவனம்
இ) உச்ச நீதி மன்றம் ஈ) இந்தியப் பட்டயக் கணக்காளர் நிறுவனம்

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



## பகுதி – ஆ

II எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளி (வினா எண் 30 க்கு கட்டாயமாக) விடையளிக்கவும் 7x2=14

21. கணக்கியல் வரையறு.
22. கணக்கியலில் முழு வெளியீட்டு கொள்கை என்றால் என்ன ?
23. ஆதார ஆவணங்கள் என்றால் என்ன ?
24. இருப்பாய்வு என்றால் என்ன ?
25. குறிமுறை என்றால் என்ன ?
26. மென்பொருள் என்றால் என்ன ?
27. ஒரு நிறுவனம் ₹.40,000 மதிப்புள்ள இயந்திரத்தை வாங்கியது. நிறுவுதல் செலவாக ₹.2,000 மேற்கொண்டது. இயந்திரத்தின் எதிர் நோக்கும் பயனளிப்பு காலம் 5 ஆண்டுகள், நேர்க்கோட்டு முறையில் ஆண்டுத் தேய்மானத் தொகையை கணக்கிடுக.
28. கீழ்க்கண்ட பிழைகள் இருப்பாய்வு தயாரிக்கும் முன் கண்டறியப்பட்டன. அவைகளை திருத்தவும்
    i) விற்பனை ஏட்டில் ₹.100 குறைவாகக் கூட்டப்பட்டுள்ளது.
    ii) கொள்முதல் ஏட்டில் ₹.400 அதிகமாகக் கூட்டப்பட்டுள்ளது.
29. பின்வரும் குறிப்பேட்டுப் பதிவுகளுக்கான விளக்கக் குறிப்பு தருக.

| நாள் | விவரம் | பே.ப.எ. | பற்று ₹ | வரவு ₹ |
|---|---|---|---|---|
| 1) | வங்கி க/கு ப<br>பங்காதாயம் க/கு<br>(..............................) | | 2,000 | 2,000 |
| 2) | எடுப்புகள் க/கு ப<br>கொள்முதல் க/கு<br>(..............................) | | 12,000 | 12,000 |

30. கீழ்க்கண்ட விவரங்களிலிருந்து சரக்கு விற்பனைக்கான அடக்கத்தினை கணக்கிடவும்.

| விவரம் | ₹. |
|---|---|
| தொக்கச் சரக்கிருப்பு | 10,000 |
| கொள்முதல் | 80,000 |
| நேரடிச் செலவுகள் | 7,000 |
| மறைமுகச் செலவுகள் | 5,000 |
| இறுதிச் சரக்கிருப்பு | 15,000 |

## பகுதி – இ

III எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளி (வினா எண் 40 கட்டாயமாக) விடையளிக்கவும் 7x3=21

31. இரட்டைப் பதிவு கணக்கியல் முறையின் பொன்னான விதிகளைத் தருக.

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



32. கணக்கியல் தகவல்களில் பின்வரும் பயனீட்டாளர்கள் ஏன் ஆர்வமாக உள்ளனர்?
அ) முதலீட்டாளர்கள் ஆ) அரசு

33. கணினிமயக் கணக்கியல் முறையின் குறைபாடுகளில் ஏதேனும் மூன்றினைத் தருக.

34. குறிப்பேட்டினை பேரேட்டுடன் வேறுபடுத்துக. (ஏதேனும் 3)

35. பின்வரும் நடவடிக்கைகளை குறிப்பேட்டில் பதிவு செய்க.

| 2016 | | | ₹ |
|---|---|---|---|
| ஜன | 1 | ரொக்கத்துடன் தொழில் தொடங்கியது | 10,000 |
| | 5 | வங்கியில் செலுத்தியது | 5,000 |
| | 7 | ராம் என்பவரிடமிருந்து சரக்குகளை ரொக்கத்திற்கு வாங்கியது | 1,000 |

36. கீழ்கண்ட கணக்குகளின் இருப்புகள் இருப்பாய்வில் பற்றுப்பத்தியில் இடம் பெறுமா அல்லது வரவுப் பத்தியில் இடம் பெறுமா எனக் காட்டிடுக.
1) வெளித்தூக்குக் கூலி 2) உள் தூக்குக் கூலி 3) விற்பனை
4) கொள்முதல் 5) வாராக்கடன் 6) வட்டிச் செலுத்தியது

37. பின்வரும் விவரங்களிலிருந்து ஜெயக்குமார் என்பவரின் 2016 டிசம்பர் 31–ம் நாளுக்குரிய வங்கிச் சரிகட்டும் பட்டியலை தயார் செய்க.
அ) ரொக்க ஏட்டின் படி இருப்பு ₹.7,130.
ஆ) செலுத்திய காசோலை வசூலாகாதது ₹.1,000
இ) வாடிக்கையாளர் நேரடியாக வங்கியில் செலுத்தியது ₹.800.

38. ஜூலை 1, 2016 அன்று, அறைகலன் ₹.1,00,000க்கு வாங்கப்பட்டது. அதன் வாழ்நாள் 5 ஆண்டுகள். 5 ஆண்டுகள் முடிவில் அதன் இறுதி மதிப்பு ₹.10,000. நேர்க்கோட்டு முறையில் தேய்மான விகிதம் காண்க.

39. கணக்கியல் சமன்பாட்டினை நிரப்புக.

| | சொத்துகள் | = | முதல் | + | பொறுப்புகள் |
|---|---|---|---|---|---|
| | ₹ | | ₹ | | ₹ |
| அ) | 1,00,000 | = | 80,000 | + | ? |
| ஆ) | 2,00,000 | = | ? | + | 40,000 |
| இ) | ? | = | 1,60,000 | + | 80,000 |

40. பின்வரும் நடவடிக்கைகளை 2017 டிசம்பர் மாதத்திற்கான, சுரேஷ் அவர்களின் கொள்முதல் மற்றும் விற்பனை ஏடுகளில் பதிவு செய்க.

| 2017 | | | ₹ |
|---|---|---|---|
| டிசம்பர் | 1 | சுமதியிடமிருந்து சரக்கு கடனுக்கு வாங்கியது | 17,800 |
| | 4 | இராணிக்கு கடனுக்கு சரக்கு விற்றது | 15,200 |
| | 10 | இரகுநாதனிடமிருந்து கடனுக்கு சரக்கு வாங்கியது | 10,000 |

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



| | | |
|---|---|---|
| 21 | சரண்யாவிற்கு கடனுக்கு சரக்கு விற்றது | 12,500 |
| 26 | ஷியாமிடம் ரொக்கத்திற்கு சரக்கு விற்றது | 3,000 |

## பகுதி – ஈ

**IV அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும் 7x5=35**

41. அ) பின்வரும் நடவடிக்கைகளை ஜவுளி வியாபாரம் செய்யும் மனோகர் அவர்களின் குறிப்பேடுகளில் பதிவு செய்க.

| 2018 மார்ச் | | ₹ |
|---|---|---|
| 1 | மனோகர் வியாபாரம் தொடங்க கொண்டு வந்த ரொக்கம் | 60,000 |
| 2 | ரொக்கத்திற்கு அறைகலன் வாங்கியது | 10,000 |
| 3 | ரொக்கத்திற்கு சரக்கு வாங்கியது | 25,000 |
| 6 | கமலேசிடமிருந்து கடனுக்கு சரக்கு வாங்கியது | 15,000 |
| 8 | ரொக்கத்திற்கு சரக்கு விற்பனை செய்தது | 28,000 |
| 10 | ஹரிக்கு கடனுக்கு சரக்கு விற்பனை செய்தது | 10,000 |
| 14 | கமலேசிற்கு செலுத்திய ரொக்கம் | 12,000 |
| 18 | வாடகை செலுத்தியது | 500 |
| 25 | ஹரியிடமிருந்து பெற்ற ரொக்கம் | 8,000 |
| 28 | சொந்தப் பயன்பாட்டிற்காக பணம் எடுத்தது | 4,000 |

*(அல்லது)*

ஆ) ரொக்கத் தள்ளுபடிக்கும் வியாபாரத் தள்ளுபடிக்கும் உள்ள வேறுபாடுகளை எழுதுக.

42. அ) பின்வரும் நடவடிக்கைகளை கணேசன் என்பவரது ஏடுகளில் குறிப்பேட்டில் பதிவு செய்து பேரேட்டுக் கணக்குகளிலும் எடுத்து எழுதுக.

| 2017 | | | ₹ |
|---|---|---|---|
| அக் | 1 | தொழில் ரொக்கத்துடன் தொடங்கியது | 25,000 |
| | 5 | வங்கியில் ரொக்கம் செலுத்தியது | 12,500 |
| | 10 | அறைகலன் வாங்கி காசோலை கொடுத்தது | 2,000 |
| | 15 | ரொக்கத்திற்கு சரக்கு வாங்கியது | 5,000 |
| | 19 | வாசு என்பவருக்கு கடனுக்கு சரக்கு விற்றது | 4,000 |
| | 22 | சொந்தப் பயனுக்காக சரக்குகள் எடுத்துக் கொண்டது | 500 |

*(அல்லது)*

ஆ) கீழ்க்கண்ட தகவல்களிலிருந்து 2017 மார்ச் 31–ஆம் நாளன்றைய வங்கிச் சரிகட்டும் பட்டியல் தயார் செய்து வங்கி அறிக்கையின் படியான இருப்பினைக் கண்டறியவும்.

1) வங்கியில் வைப்பு செய்த காசோலை வசூலித்து வரவு வைக்கப்படாதது ₹.500
2) விடுத்த காசோலை செலுத்துகைக்கு இதுவரை முன்னிலைப் படுத்தப்படாதது ₹.1000
3) வங்கியால் பிடித்தம் செய்யப்பட்ட வட்டி ₹.100

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



4) நிலை அறிவுறுத்தலின் படி வங்கி செலுத்திய வாடகை ₹.200

5) ரொக்க ஏட்டின் படி இருப்பு ₹.300

43. அ) பல்வேறு வகையான கணக்கியல் மென்பொருள்களை விளக்குக.

*(அல்லது)*

ஆ) பின்வருவனவற்றை ஆள்சார் கணக்கு, சொத்து கணக்கு மற்றும் பெயரளவு கணக்கு என்று வகைப்படுத்துக.

| | | |
|---|---|---|
| அ) முதல் | ஆ) கட்டடம் | இ) உள் ஏற்றிச் செல் செலவு |
| ஈ) ரொக்கம் | உ) தள்ளுபடிப் பெற்றது | ஊ) வங்கி |
| எ) கொள்முதல் | ஏ) சந்துரு | ஐ) கொடுபட வேண்டிய கூலி |

44. அ) ரவிச்சந்திரன் என்பவரது ஏடுகளிலிருந்து 31.12.2016 அன்று எடுக்கப்பட்ட இருப்புகளிலிருந்து இருப்பாய்வு தயாரிக்கவும்.

| | ₹ | | ₹ |
|---|---|---|---|
| முதல் | 1,50,000 | விற்பனை | 75,000 |
| கடனாளிகள் | 22,800 | விற்பனைத் திருப்பம் | 1,000 |
| பெற்ற வாடகை | 500 | அளித்த தள்ளுபடி | 800 |
| வங்கி மேல்வரைப் பற்று | 3,100 | பெற்றத் தள்ளுபடி | 1,000 |
| கடனீந்தோர் | 5,500 | கூலி | 2,900 |
| வளாகம் | 1,46,000 | சம்பளம் | 3,500 |
| தொடக்கச் சரக்கிருப்பு | 10,000 | கழிவு கொடுத்தது | 1,100 |
| கொள்முதல் | 45,000 | பொதுச் செலவுகள் | 2,000 |

*(அல்லது)*

ஆ) இலக்குமி போக்குவரத்து நிறுவனம் அக்டோபர் 1, 2014 அன்று ரூ.8,00,000 க்கு கனரக வாகனம் ஒன்றை வாங்கியது. குறைந்து செல் மதிப்பு முறையில் ஆண்டுதோறும் 15% தேய்மானம் நீக்க வேண்டும் 31 மாரச் அக்கனரக வாகனம் ₹ 5,00,000 க்கு விற்கப்பட்டது ஒவ்வொரு ஆண்டும் கணக்குகள் மாரச் 31 ல் முடிக்கப்பெறுகின்றன விற்ற வாகனத்திற்கான இலாபம் அல்லது நட்டத்தினைக் கணக்கிடவும்.

45. அ) ஆட்டோமொபைல் நிறுவனம் நடத்தும் இராணியின் ஏடுகளில் பின்வரும் விவரங்களை கணக்கியல் சமன்பாட்டின் படி பதிவு செய்க.

| | ₹ |
|---|---|
| 1) ரொக்கத்துடன் தொழில் தொடங்கியது | 80,000 |
| 2) இரமேஷிடமிருந்து கடனுக்கு சரக்கு வாங்கியது | 10,000 |
| 3) ரொக்கத்திற்கு அறைகலன் வாங்கியது | 6,000 |
| 4) கடனீந்தோருக்கு அளித்த ரொக்கம் | 8,000 |
| 5) ரொக்கத்திற்கு சரக்கு வாங்கியது | 2,000 |
| 6) வாடகை ரொக்கமாக செலுத்தப்பட்டது | 500 |

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



*(அல்லது)*

ஆ) பின்வரும் தகவல்களிலிருந்து முன் பண மீட்பு முறையில் பாகுபடுத்தப்பட்ட சில்லறை ரொக்க ஏட்டைத் தயாரிக்கவும்.

| 2017 ஜனவரி | | ₹ |
|---|---|---|
| 1 | சில்லறைச் செலவுகளுக்காக ரொக்கம் பெற்றது | 500 |
| 2 | பயணச் செலவுக்கு கொடுத்தது | 5 |
| | வண்டிக் கட்டணம் கொடுத்தது | 12 |
| 3 | தபால் செலவு செய்தது | 15 |
| | தற்காலிக வேலையாட்களுக்கு கூலி கொடுத்தது | 66 |
| 4 | எழுது பொருள் வாங்கியது | 134 |
| | போக்குவரத்துச் செலவுக்கு கொடுத்தது | 18 |
| 5 | பழுதுபார்ப்புச் செலவு செய்தது | 65 |
| | பேருந்துக் கட்டணம் செலுத்தியது | 11 |
| | வண்டிக் கட்டணம் கொடுத்தது | 24 |

46. அ) கல்யாண சுந்தரம் என்பவரின் முப்பத்தி ரொக்க ஏட்டில் கீழ்க்கண்ட நடவடிக்கைகளைப் பதிவு செய்க.

| 2017 ஜனவரி | | ₹ |
|---|---|---|
| 1 | ரொக்க இருப்பு | 42,500 |
| | வங்கி இருப்பு | 35,000 |
| 3 | ரொக்க விற்பனை மூலம் பெற்ற தொகை | 15,700 |
| 4 | வங்கியில் ரொக்கம் செலுத்தியது | 11,500 |
| 6 | ரொக்கக் கொள்முதல் | 14,300 |
| 9 | மின்னணு தீர்வை முறையில் வங்கி நேரடியாக பங்காதாயம் பெற்றது | 2,000 |
| 10 | பொங்கல் முன் பணம் பணியாளர்களுக்கு வங்கி மூலம் செலுத்தியது | 17,000 |
| 12 | நாகராஜனிடமிருந்து ரொக்கம் பெற்றது | 11,850 |
| | அவருக்கு அளித்த தள்ளுபடி | 150 |
| 17 | மகேஷீக்கு கொடுக்க வேண்டிய ₹.20000–த்தில் செலுத்தி அவர் கணக்கு தீர்க்கப்பட்டது | 19,700 |
| 20 | சொந்த செலவுகளுக்காகப் பணம் எடுத்துக் கொண்டது | 20,000 |

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



| | | |
|---|---|---|
| 30 | தானியங்கி பணம் வழங்கும் இயந்திரத்தின் மூலம் அலுவலக செலவுகளுக்காகப் பணம் எடுத்தது | 1,500 |

*(அல்லது)*

ஆ) கீழ்க்கண்டவற்றை முதலினம் அல்லது வருவாயினம் என வகைப்படுத்தவும்.

1) தணிக்கைக் கட்டணம் செலுத்தியது ₹.10,000
2) தொழிலாளர் நலனுக்காகச் செய்த செலவு ₹.5,000
3) நிறுவன வாகனத்தின் மீதான பராமரிப்புச் செலவு ₹.2,000
4) பழைய இயந்திரம் வாங்கி பழுதுபார்த்தச் செலவு ₹.3,000
5) ஆலை வாடகைச் செலுத்தியது ₹.12,000

47. அ) மனோஜின் 2016, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய இலாப நட்டக் கணக்கு தயாரிக்கவும்.

| பற்று இருப்பு | ₹ | வரவு இருப்பு | ₹ |
|---|---|---|---|
| மொத்த இலாபம் | 25,000 | பயணச் செலவுகள் | 500 |
| சம்பளம் | 5,600 | எழுதுபொருள் செலவு | 75 |
| காப்பீடு | 200 | வாடகை | 650 |
| அளித்த தள்ளுபடி | 400 | கடன் மீது வட்டி | 225 |
| பெற்ற தள்ளுபடி | 300 | பழுதுபார்ப்புச் செலவுகள் | 125 |
| பெற்ற கழிவு | 100 | அலுவலகச் செலவுகள் | 55 |
| விளம்பரம் | 450 | பொதுச் செலவுகள் | 875 |
| அச்சு செலவுகள் | 375 | தபால் செலவுகள் | 175 |

**சரிக்கட்டுதல்கள்:**

1) கொடுபட வேண்டிய சம்பளம் ₹.400
2) முன்கூட்டிச் செலுத்திய வாடகை ₹.50
3) கழிவுப் பெற வேண்டியது ₹.100

*(அல்லது)*

ஆ) தேய்மானம் ஏற்படுவதற்கான காரணங்கள் யாவை?

***/***

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com